[22nd December 1956

SRI V. BALAKRISHNAN : பெரிய நியாய கோர்டிலே ரூபாய்க்கு ஒரு அணா வீதம் கூட்டிக்கொடுக்கவேண்டுமென்று இடைக்கால உத்தரவு போட்டிருக்கிறார்கள். அந்த உத்தரவு அமுலுக்கு கொண்டுவரப்படுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ஆம். சுப்ரீம் கோர்டு அவ்வாறு உத்தரவு போட்டிருக்கிறார்கள். அது நிச்சயமாக அமுலுக்குக் கொண்டுவரப்படும். அதற்கு மந்திரியின் உதவி வேண்டியதில்லை.

SRI P. RAMAMURTHI : சென்னை ராஜ்யத்தில் ஏற்பட்ட ஒரு தொழில் கோர்ட்டு செய்த தீர்ப்புக்கு எதிராக முதலாளிகள் அப்பீல் செய்திருக்கிறார்கள். அப்பீலில் ஸ்டே ஆர்டர் கொடுக்கப்பட்டிருக்கிறது. சென்னை சர்க்கார் அந்த அப்பீலில் தங்கள் சார்பாக ஒரு வக்கீலை ஆஜராகச் செய்து அதற்கு எதிராக வழக்காட உத்தேசம் உண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அவ்வாறு உத்தேசம் ஒன்றுமில்லை.

9-20 a.m. SRI P. RAMAMURTHI : வழக்கு கீழ் கோர்ட்டில் கிட்டதட்ட 4, 5 நாட்கள் நடந்தபிறகு அப்பீலுக்குப்போயிருக்கிறது. சாதாரண தொழிலாளிக்கு தினசரி 10 அணாவாவது சம்பளம் கொடுக்கவேண்டுமென்று சுப்ரீம் கோர்டில் வழக்காடி அவர்களுக்கு வசதிக் குறைவு என்பதைத் தெரிந்து கொண்டு அவர்களுக்கு நியாயம் வழங்குவதற்கு சர்க்கார் ஏதாவது உதவி செய்வதற்கு முன்வருவார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அவ்வாறு யோசனை ஒன்றும் சர்க்காரிடம் இல்லை. அதற்கு அவசியம் இருக்கிறதாக சர்க்கார் கருதவில்லை.

SRI N. K. PALANISAMY : தீர்ப்பு வெளியானபிறகு சர்க்கார் ஒரு முக்கூட்டு மகாநாடு நடத்த ஏதாவது யோசனை செய்திருந்ததா ? அப்படியானால் அது என்னவாயிற்று ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : " அவார்ட் " பிரசுரிக்கப்பட்ட பிறகு சர்க்கார் முக்கூட்டு மகாநாடு நடத்துவதற்காக ஒன்றும் முற்படவில்லை.

Recognition of Trade Unions

* 12 (S.N.) Q.—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Agriculture be pleased to state where the matter now stands in respect of the proposed legislation for recognition of Trade Unions?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : **A tentative draft Bill on the subject was prepared and circulated to the members of the State Labour Advisory Board for their views. The draft of the** Bill is being finalized in the light of the suggestions made by the members of the Board at the meeting held on 10th October 1956.

SRI M. KALYANASUNDARAM : ஸார், இந்த மசோதா எப்பொழுது சட்டசபைக்கு கொண்டுவரப்படும் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்த மசோதா தயாராக்கப்பட்டுவிட்டது என்றே சொல்லலாம். இதற்கு மேல் நடவடிக்கைகள் தான் எடுத்துக்கொள்ளவேண்டும். இதற்கும் மத்திய அரசாங்கத்தின் அங்கீகாரம் வேண்டியிருக்கும். இதெல்லாம் பெற்றபிறகுதான் சட்டசபைக்கு கொண்டுவரப்படும்.

22nd December 1956]

SRI M. KALYANASUNDARAM : மத்திய அரசாங்கத்தின் அங்கீகாரத்திற்காக வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு விட்டதா ? மத்திய அரசாங்கத்தின் அங்கீகாரம் வருவதற்கு முன்னுல் அதைப் பிரசுரிக்க எந்தவித தடைகளும் இருக்கமுடியாது. அதற்கு சர்க்கார் வேண்டிய நடவடிக்கைகள் எடுக்குமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : மசோதா இப்பொழுதுதான் தயாரிக்கப்பட்டிருக்கிறது. இனி மத்திய அரசாங்கத்தின் அங்கீகாரம் பெற வேண்டும். அந்த அங்கீகாரம் பெற்ற பிறகுதான் பிரசுரிப்பது நலமென்று நான் கருதுகிறேன்.

SRI V. BALAKRISHNAN : இதன் அவசியத்தை மந்திரியவர்கள் சற்று சுருக்கமாக களிகூர்ந்து விளக்குவார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : போட்டி சங்கங்கள் இருந்தால் அதனுல் தொழிலாளர்கள்தான் பாதிக்கப்படுகிருர்கள். ஆகவே அம்மாதிரி சங்கங்களுக்கு இடம் கொடுக்காமல் இருப்பதற்காக அங்கீகரிக்கக் கூடிய சங்கம் ஒன்றுதான் இருக்கவேண்டும் என்பதே இந்த மசோதாவின் கருத்து.

Training schools

* 398 *Q.*—SRI K. VINAYAKAM : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether a State Selection Committee was constituted by the Government for selecting candidates for admission into Basic training schools;

(*b*) what is the method adopted for selecting candidates for admission into non-Basic training schools in the State;

(*c*) whether the method of selection is different in Government training schools when compared to private training schools; and

(*d*) whether there is any difference in the method of selection between the city training schools and the mufassal training schools in the various districts?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) Yes, Sir. A selection committee is constituted for each Government Basic Training School.

(*b*) A Gazette notification calling for applications for admission into Government non-Basic Training Schools is published by the District Educational Officers and Inspectresses. In making selections they follow the instructions issued from time to time from Director of Public Instruction's Office for admission into training school.

(*c*) Yes, Sir.

(*d*) No, Sir.

SRI K. VINAYAKAM : Is it a fact in the constitution of these committees for selection of candidates for admission to basic schools only people belonging to particular political parties have been chosen, namely, from the Congress Party?